செய்தி வெளியீடு எண்: 496 நாள் : 09.10.2015

பொதுத் (தேர்தல்கள்–1)துறை

## செய்தி வெளியீடு

01.01.2016ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

20.9.2015 மற்றும் 4.10.2015 ஆகிய நாட்களில் அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் (பொதுவாக பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளவை) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம், இடம் மாற்றலுக்கான படிவங்களை பெறுதல் பொருட்டு இரண்டு சிறப்புமுகாம்கள் நடைபெற்றன. சிறப்பு முகாம்களையும் சேர்த்து, இது வரைமொத்தம் 14,45,295 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் பெயர் சேர்த்தல் மற்றும் இடம் மாற்றலுக்காக 11,34,859 படிவம் 6 விண்ணப்பங்களும் பெயர் நீக்குதலுக்காக 60,922 படிவம் 7 விண்ணப்பங்களும் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக 1,64,285 படிவம் 8 விண்ணப்பங்களும், தொகுதிக்குள் முகவரி மாற்றம் தொடர்பாக 85,229 படிவம் 8ஏ விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல், திருத்துதல், முகவரி மாற்றம் தொடர்பான படிவங்கள் 6, 7, 8 மற்றும் 8ஏ பெறுவதற்கான அடுத்த மற்றும் இறுதி சிறப்புமுகாம் 11.10.2015 (ஞாயிற்றுக்கிழமை) அன்று அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் நடைபெறும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனைத்து வாக்குச்சாவடிநிலையங்களிலும் அலுவலர்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்வர். விண்ணப்பங்கள் (குறிப்பாக இணைய வழி விண்ணப்பங்கள்) பெறும் கால அளவை இந்திய தேர்தல் ஆணையம் 24.10.2015 வரை நீட்டித்துள்ளது. விண்ணப்பங்களை வாக்காளர் பதிவு அதிகாரி/ உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களிலும் சமர்ப்பிக்கலாம். பொதுமக்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது விவரங்கள் தொடர்பான பல்வேறு சேவைகளை பெறுவதற்காக இந்திய தேர்தல் ஆணையம் இந்தியாவிலேயே முதன்முறையாக, ஈசி (EASY) என்ற முன்னோடி திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழக வாக்காளர்களும் குடிமக்களும் வாக்காளர் பட்டியல் மற்றும் தேர்தல் தொடர்பான சேவைகளை இணையம் மற்றும் பல்வழி அணுகுமுறைகளில் பெறலாம்.

வாக்காளர் பட்டியல்களை முற்றிலும் தவறுகள் இல்லாமல் தயாரிக்கவும் இரட்டைபதிவு மற்றும் இறந்த வாக்காளர் பெயர்களை நீக்கவும், பெயர் சேர்த்தல் மற்றும் நாளது வரையிலாக்குதல் ஆகியவற்றை எளிய மற்றும் இனிய அனுபவமாக்கவும் ஈசி(EASY)உருவாக்கப்பட்டுள்ளது. வாக்காளர் தங்களது விவரங்களை சரிபார்த்து தவறுகளை களைந்து விவரங்களை உறுதிபடுத்திக் கொள்ளலாம்.

வாக்காளர்கள் ஈசியை(EASY) கீழ்கண்டவழிகளின் மூலம் பயன்படுத்தலாம்

1. கூகுள் ப்ளேஸ்டோரிலிருந்து ஆண்ட்ராய்டு செயலி மூலம்.
   https://play.google.com/store/apps/details?id=com.uniphore.easy
2. தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான www.electons.tn.gov.in/easy மூலம்.
3. SMS கேட்வே மூலம் **9444123456** என்ற எண்ணுக்கு "EPIC <epic number>" என்று குறுந்தகவல் அனுப்பலாம்.
4. **044–66498949** என்ற IVRS தொலைபேசி எண்ணை அழைத்து தகவல்களை அளிக்கலாம்.

ஈசி(EASY) மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், சரிபார்த்தல், திருத்துதல் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள வாக்காளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது எனலாம். ஈசி மூலம் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்படவுள்ளன:

| *கூறு* | *கிடைக்குமிடம்* |
|---|---|
| முகப்புப் பக்கம் | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| EASY குறித்து நண்பர்களுக்குத் தெரிவித்தல் (முகப்புப்பக்கம்) | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| புதிய வாக்காளர் (படிவம் 6) | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| ஆட்சேபணை/நீக்கல் (படிவம் 7) | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| EPIC எண் மூலம் வாக்காளர் விவரம் பெறுதல் | செயலி, குறுந்தகவல், IVRS மற்றும் வலைப்பக்கம் |
| வாக்குச்சாவடி அமைவிடம்– முகவரி | செயலி, குறுந்தகவல், IVRS மற்றும் வலைப்பக்கம் |
| வாக்குச்சாவடி அமைவிடம்– வரைபடம் | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| விவரங்களை உறுதிப்படுத்தல் | செயலி, குறுந்தகவல், IVRS மற்றும் வலைப்பக்கம் |
| விவரங்களைத் திருத்துதல் (படிவம் 8) | செயலி, குறுந்தகவல், IVRS மற்றும் வலைப்பக்கம் |
| தொகுதிக்கு வெளியே முகவரி மாற்றம் (படிவம் 6) | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| தொகுதிக்குள்ளேயே முகவரி மாற்றம் (படிவம் 8A) | செயலி மற்றும் வலைப்பக்கம் |

| *கூறு* | *கிடைக்குமிடம்* |
| --- | --- |
| ஆவணச்சான்றுகளை பதிவேற்றல் (வாக்காளரின் விருப்பத்தைப் பொறுத்து) | செயலி மற்றும் வலைப்பக்கம் |
| விண்ணப்பத்தின் நிலை குறித்து வாக்காளர் அறிய | செயலி, குறுந்தகவல், IVRS மற்றும் வலைப்பக்கம் |
| நிரப்பப்பட்ட படிவங்களைப் பார்க்க, பதிவிறக்கம் செய்ய | செயலி, குறுந்தகவல், IVRS மற்றும் வலைப்பக்கம் |

தமிழகத்திலுள்ள குடிமக்களும் வாக்காளர்களும் உயரிய சேவையினைப் பெறும்பொருட்டு வலுவான பின்புல ஆதாரத்துடன் ஈசி உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் உரிய கால அவகாசத்துக்குள் ஒளிவுமறைவின்றிப் பரிசீலனை செய்யப்படுவதைக் கண்காணிக்க 6 லாக்–இன் கணினி முடிச்சுகள் மற்றும் 4 டேஷ்போர்டுகள் அடங்கிய உள்ளிணைய (Intranet) அமைப்பு ஒன்றினை தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம் உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பில் ‘ BLO நெட் ’ மற்றும் ‘ERO நெட்’என்ற இரு துணை அமைப்புகள் மிகவும் முக்கியமானவை. சரிபார்த்தலுக்காக தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேர்வுகள் குறித்து ‘BLO நெட்’ மூலம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவிப்பு/ குறுந்தகவல் அனுப்பப்படும். அதற்கு அவர்கள் அதே வழியில் பதில் அனுப்பி நேரத்தை மிச்சப்படுத்தி தரவு உள்ளீட்டில் ஏற்படக்கூடிய தவறுகளையும் தவிர்க்கமுடியும். ‘ERO நெட்’ மூலம், வாக்காளர் பதிவு அதிகாரி ஸ்கேன் செய்யப்பட்ட படிவத்திலுள்ள முழு விவரங்களையும் பார்க்க முடியுமாதலால் அவரால் சரியான முடிவினை எடுக்கமுடியும். கோரிக்கை/ஆட்சேபனைப் படிவத்தின் பரிசீலனை நிலைகள் குறித்து முழுமையாக அறியமுடியுமாதலால் நீக்கல்களைக் குறித்து பெறப்படும் பல்வேறு புகார்களையும் சரியான முறையில் ஆராய முடியும். மேலும், பயன்படுத்துவோருக்கு உயரிய வலைதள சேவையினை அளிக்கும் வகையில் முற்றிலும் புதிய வடிவில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளம் விரைவில் மாற்றியமைக்கப்படவுள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**